தொழிற்சாலை அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்தகைய தொழிற்சாலை எண்ணூரில் விரைவில் ஆரம்பிக்கப்படும். நேரடியாக ஜப்பானுக்கும் அமெரிக்காவிற்கும், மற்ற வெளிநாடுகளுக்கும் அனுப்புகிற நிலைமை விரைவில் ஏற்படும்.

திரு. எம். அய்யாசாமி : தலைவரவர்களே, எண்ணூரில் ஆரம்பிக்க இருக்கிற இந்த தொழிற்சாலை அரசாங்க சார்பில் நடத்தப்படுமா? அல்லது தனியார் துறையில் நடத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தனியார் துறையில்தான்.

MR CHAIRMAN : Question No. 144 is postponed.

Fort St. George Gazette

***145. Q.**—**THIRU N. R. THIAGARAJAN** : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether all parts of the Fort St. George Gazette are published in English and Tamil ; and

(*b*) if all the parts of the Fort St. George Gazette are not published in Tamil, whether there is any proposal to publish them in Tamil also ?

மாநில அரசிதழ்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில அரசிதழின் எல்லாப் பகுதிகளும் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிடப்படுகிறதா?

(இ) தமிழில் மாநில அரசிதழின் எல்லாப் பகுதிகளும் வெளியிடப் படவில்லையென்றால், அப்பகுதிகளை தமிழில் வெளியிடும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) தமிழ் நாட்டின் அரசிதழின் எல்லா பாகங்களும் ஆங்கிலத்தில் வெளியிடப் படுகின்றன. தவிர, தமிழ்நாட்டு அரசிதழின் இரண்டாம் பாகத்தின் 1-வது, 2-வது பிரிவுகளுக்கும், மூன்றாம் பாகத்திற்கும், நான்காம் பாகத்தின் 1-வது 3-வது 4-வது பிரிவுகளுக்கும், ஐந்தாம் பாகத்துக்கும் தேவையான போதெல்லாம் இணைப்புகள் தமிழில் வெளியிடப்பட்டு வருகின்றன.

(ஆ) மாநில அரசிதழின் எல்லாப் பகுதிகளையும் தமிழில் வெளியிடும் செயற்குறிப்பு எதும் தற்போது இல்லை.

Construction of houses for Harijans.

***146 Q.**—**THIRU N. R. THIAGARAJAN** : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have proposed to construct houses at a cost of Rs. 1,500 each for all the Harijans in Tamil Nad ; and

(*b*) whether it is a fact that the Government have issued orders that these houses should not be constructed on wet lands ?

1st March 1968]

†அரிஜன மக்களுக்கு வீடு கட்டிக்கொடுத்தல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் வாழும் அரிசன மக்கள் அனைவருக்கும் ரூபாய் 1,500 செலவில் வீடு கட்டிக் கொடுக்கப் போவது உண்மையா?

(இ) நஞ்சை நிலத்தில் இந்த மாதிரி வீடுகள் கட்ட வேண்டாம் என உத்திரவு போடப்பட்டுள்ளது உண்மையா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) கூடுமானவரை நன்செய் நிலங்களை ஆர்ஜிதம் செய்தலாகாது என்றும் பயிரிடப்படாத புன்செய் நிலங்களோ, தரிசு நிலங்களோ கிடைக்காத போது மட்டும் கடைசி பட்சமாக, நன்செய் நிலங்களை ஆர்ஜிதம் செய்யலாம் என்றும் அரசு, மாவட்ட ஆட்சி தலைவர்களுக்குக் கட்டளைகள் பிறப்பித்துள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, பதவியேற்றவுடன் ஹரிஜன நல இலாகா அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஹரிஜன குடிமகனுக்கும் 1,500 ரூபாய் செலவில் ஆஸ்பெஸ்டாஸ் வீடு கட்டிக்கொடுக்கப் போவதாக சொல்லிய பத்திரிகை பிரசங்கத்தைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இப்போது இல்லை என்பது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. ஆகவே அதை அரசாங்கம் மீண்டும் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, நான் கூறியது மத்திய சர்க்கார் ரூபாய் 3,000 திட்டத்தில் வீடு கட்டித்தர முன் வந்துள்ளதுபற்றி; அதிலே 1,600 ரூபாய் மத்திய சர்க்கார் மானியமாகவும், 400 ரூபாய் அதில் நலன் பெறுகிறவர்கள் தருவதாகவும், மாநில சர்க்கார் 1,000 ரூபாய் கடனாக கொடுப்பது என்றும், ஆக மொத்தம் 3,000 ரூபாயில் 1,500 ரூபாயை மத்திய சர்க்கார் கொடுக்க முன் வந்துள்ளது என்றும்தான் சொல்லியிருக்கிறேன்.

திரு. என். ஆர். தியாகராஜன் : அந்தத் திட்டத்தின் கீழ் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதற்காக இப்போது மாவட்ட கலெக்டர்கள் எல்லாம் தங்களுடைய மாவட்டங்களில் இருக்கக் கூடிய இடங்களை எல்லாம் தேர்ந்தெடுத்து வருகிறார்கள். அதற்குறிய விளக்கமான அறிக்கை வந்த பிறகு முடிவு எடுக்கப்படும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : எத்தனை பேர்களுக்கு கட்டிக்கொடுக்கப்படும்? யார் யாருக்கு கொடுக்கப்படும்.?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: முடிந்தவரை இல்லாதவர்களுக்கும், முடியாதவர்களுக்கும் தகுந்தவர்களுக்குமாகப் பார்த்துக் கட்டிக் கொடுக்கப்படும்.

திரு. ஆர். எம். சேஷாத்திரி : ராஜஸ்தானில் ஒரு சட்டமிருக்கிறது. அது 5, 6 வருடங்களுக்கு முன்னால் போடப்பட்ட சட்டம். அந்த சட்டத்தில் வீடு கட்டுவது பற்றி ஒரு புதிய முறை கையாளப்பட்டு அது வெற்றிகரமாக நடைபெற்று இருக்கிறது. அதே முறையை யோசனை செய்து அமெரிக்காவில் கூட, Kennedy Proposal என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த முறையின் தாத்பரியம் என்னவென்றால் எந்த இடத்தில் யார் இருக்கிறார்களோ அவர்களே இருந்து வேலை செய்யச் சொல்லுவது, அவர்களுடைய சிரமம், வேலை முதலியவைகளைச் சர்க்கார் கொஞ்சம் செய்து கொடுப்பது, இவ்வாறு செய்வதாகும். இப்போது கேள்விக்கு வருகிறேன். இப்படிப்பட்ட முறையில் இந்த சர்க்கார் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் இப்போது வரவு செலவு திட்டத்தின் மீது விவாதத்தின்போது விளக்கமாக இது குறித்துப் பேசினால் பயன் ஏற்படலாம்.

திரு. கே. ராமதாஸ் : தலைவரவர்களே, சமீபத்தில் திரு ஜீ. டி. நாயுடு அவர்கள் குறைந்த விலையில் வீடுகள் கட்டியிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அம்மாதிரி திட்டத்தில் குறைந்த விலையில் வீடுகள் கட்டுவதற்கு இந்த அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட வீடுகளைப் பற்றி ஹரிஜன இலாகா இயக்குனர் அவர்கள் ஆராய்ந்து விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். விவரங்கள் சேகரிக்கப்பட்ட பிறகு அது பற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ள முயற்சி செய்யலாம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வீடுகள் கட்டுவதற்கு ஆகும் தொகை 1,200 ரூபாய், 800 ரூபாய் ஆகியவைக்குள் முடிந்து விடக்கூடுமென்றாலும், மனை வாங்குவதற்கு சில இடங்களில் 3,000 ரூபாய் வரை வருகிறது என்பதை உணரவேண்டும்.

திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, முந்தைய கவுண்டன் பட்டி என்ற ஊரில் வீடுகளைக் கட்டி அது இடிந்து போய் தொல்லைகள் ஏற்பட்டனவே ; அது போல் இல்லாமல் நல்லமுறையில் கழக அரசு வீடுகள் கட்டிக்கொடுக்க அக்கறை செலுத்துமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, கடன் முறையில் ஆயிரம் ரூபாய் ஒதுக்கி, 750 ரூபாய் மானியமாகவும், 125 ரூபாய் அவர்களுக்கு கடனாகவும் தரப்பட்டு வந்தது. அதனால் ஆயிரம் ரூபாயில் இந்த கவுண்டன்பட்டி ஊரில் வீடுகள் கட்டப்பட்டது, இடிந்து போனது. அந்தத் திட்டத்தை இந்த புதிய அரசு கைவிட்டு விட்டது. எனவேதான் மத்திய சர்க்கார் உதவியோடு 3,000 ரூபாயில் திட்டம் போடப்பட்டு இருக்கிறது.

திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார் : தலைவரவர்களே, கோவையில் உள்ள பேரறிஞர் ஜீ. டி. நாயுடு அவர்கள் சமீபத்தில் ஒரே நாளில், 9 மணி நேரத்தில் சொற்பச் செலவில் வீடுகள் கட்டி அதை நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும், சுகாதார அமைச்சர் அவர்களும் திறந்து வைத்ததாக பத்திரிகையில் பார்த்தேன். அப்படி குறுகிய காலத்தில் சொற்ப விலையில் வீடு கட்டுவது பற்றி இந்த அரசாங்கம் ஆராய்ந்து விரைந்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த வீடுகள் நீண்ட காலத்திற்கு தாங்குமா என்பதை பரிசீலித்த பிறகு தான் சொல்ல வேண்டும்.

திரு. எம். எத்திராஜுலு : தலைவரவர்களே, 3,000 ரூபாயில் வீடுகள் கட்டப் போவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த வீடுகள் மிகவும் பின் தங்கிய சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள் போன்றவர்களுக்குக் கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது சொல்லப்பட்ட வீடுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகும். ஏனைய மக்களுக்கு 100-க்கு 10 சதவீதம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அந்த விகிதத்தில் அவர்களுக்கும் வீடு கிடைக்கலாம்.

Sankarankoil Hospital.

*147 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Sankarankoil Hospital in Tirunelveli district is functioning without a lady doctor for the past one year ;

(*b*) whether it is a fact that from 19th September 1967 there is no male doctor too ; and

(c) the number of other hospitals where there are no doctors from the beginning of this financial year.